**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 109** **நாள்: 20.02.2026**

**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் பணி ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான (Nodal Officers) கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் தொடர்பான பல்வேறு முன்னேற்பாடுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இன்று ரிப்பன் கட்ட வளாகக் கூட்டரங்கில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பணி ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான (Nodal Officers) கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சட்டமன்றப் பொதுத் தேர்தலில் ஒருங்கிணைப்பு பணி மேற்கொள்ளவுள்ள அலுவலர்களான வாக்காளர் பட்டியல் பணி, அஞ்சல் வாக்குச்சீட்டு மற்றும் சேவை வாக்காளர்கள் பணி, வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதி ஏற்படுத்துதல், தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வேட்பு மனுத் தாக்கல், சட்டம் ஒழுங்கு மற்றும் பதற்றமான வாக்குச்சாவடி கண்காணித்தல், வாக்கு எண்ணிக்கை மையத்தில் முன்னேற்பாடுப் பணி, தேர்தல் நடத்தை விதிகளை கண்காணித்தல், தேர்தல் உதவி எண் மற்றும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை, தேர்தல் தொடர்பான புகார்கள், வாக்காளர் சேவை மையங்கள், ஊடகச் சான்று மற்றும் ஊடக கண்காணிப்புப் பணி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) தங்களது பணிகளை சிறப்பாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி நா.பூஷ்ணாதேவி (தேர்தல்), தேர்தல் பணி ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**